65

# குமரகுருபரர் காட்டும் சிவனியத் தொன்மம்

முனைவர்.ம.கீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயமபுத்தூர் - 641 043.

## முன்னுரை

பண்டைக் காலத்துச் சான்றோர்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றி வணங்கி வந்தனர். அவ்விறைவன் உயிர்களுக்குச் செய்துவரும் அருளிச் செயல்களையெல்லாம் இந்நில உலகம் உணரும் வகையில் அவற்றைக் கதைகளாக உருவாக்கி வைத்தனர். கதைகளின் அமைப்பு பல திறப்பட்டதாகும். சிலகதைகள் உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே திறம்பட அமைத்து அவற்றின் வாயிலாக அரிய உண்மைகளை உணர்த்துவதாகும். ஒரு மனிதனை வளர்த்தல், அழித்தல், மனிதனுடைய சார்புநிலை போன்றவற்றிற்கு விளக்கம் கூறுவனவாகப் பழங்கதைகள் அமைந்தன. இறைவனுடைய திருவிளையாடல்களில் பல்வேறுவகை தொன்மச் செய்திகள் இருப்பினும் இக்கட்டுரையில் சிவனின் தொன்மச் செய்தியைப் பற்றிக் காணலாம்.

## தொன்மம் விளக்கம்

தொன்மம் எனப்படுவது புராணமாகும். புராணம் எனப்படுவது பழங்கதையாகும். பழங்கதை எனப்படுவது மிக்க பழமையானதும், 



அடிப்படையானதுமான மனித ஆன்மீக வாழ்வு பற்றிய வரலாற்றைக் குறிப்பதாகும். தொல்காப்பியத்தில் தொன்மை எனும் சொல் எண் வகை வனப்புக்களுள் ஒன்றினைக் குறிக்க வழங்கப்படுகிறது. இதனை

> ''தொன்மை தானே
> உரையொடு புணர்ந்த பழமை மேற்றே''

என்ற நூற்பா மூலம் அறியலாம். அதாவது புகழ்வாய்ந்த பழங்கதைகள் பற்றியதென உரையாசிரியரும் மேற்கோள் காட்டுகின்றார். பழங்காலந் தொட்டு வழங்கும் புகழ்பெற்ற கதைகளை அடிப்படையாகக் கொண்டு அமையும் இலக்கியங்கள் தொன்மை எனும் வனப்பு உடையன என்று அறியமுடிகின்றது தொன்மை என்ற சொல்லுடன் புராணம், பழங்கதை என்னும் சொற்களையும் 'மித்' எனும் ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகும் தமிழ்ச் சொற்களாக வழங்குகின்றனர்.

## தமிழில் தொன்மம்

தொன்மங்கள் தனி ஒருவரால் படைக்கப்படுவதில்லை. மக்களிடையே வழங்கி, வழங்கி உருப்பெறுகின்றன. இவை ஒரு வகை வாய்மொழி இலக்கியங்களாகும். அதனால்தான் பல்வேறு வகைப்பட்ட கதைகளாக மாற்றி மாற்றிச் சொல்லப்பட்டு இடம்விட்டு இடம்பெயர்ந்து பல மாறுதல்களோடு உலா வருகின்றன. தொன்மங்களின் செல்வாக்கு கிரேக்க நாகரிகத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது. வடமொழியும் தொன்மங்களால் வளம்சான்றது. இந்தியமொழிகளின் இலக்கியங்களிலும் கலைகளிலும வடமொழித் தொன்மங்கள் ஊடுருவிக் கலந்து உரமூட்டியுள்ளன.

தமிழில் அமைந்துள்ள சில தொன்மங்களை இறையனார் களவியல் உரை, தேவாரம், திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற இடைக்கால இலக்கியங்களில் காணமுடிகின்றது. இத்தொன்மங்கள் வடமொழித் தொன்மங்களிலிருந்து வேறுபட்ட நிலையுடையன. இவற்றில் சில, மொழியை முன்நிறுத்திய தொன்மங்கள் ஆகும். முச்சங்கங்கள் பற்றிய களவியலுரைச் செய்திகள் தொன்மையாகக் கருதத்தக்கன. தமிழைப் போலவே சைவமும் தமிழர் தொன்மங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளது. முருகன், சிவபெருமான், சிவனடியார் தொடர்பான கதைகளெல்லாம் தமிழ்மொழியின் தொன்மங்கள் என்று கருதத்தக்கன. இவற்றிலும் வடமொழித் தொன்மங்களின் ஊடுருவல் உண்டு.

தொன்மங்கள் இலக்கியத்திற்குப் பாடுபொருளாகவும் பாடுமுறை உத்திகளை வழங்குவனவாகவும் அமைந்துள்ளன. கலைகளில் சிறப்பாக இலக்கியக் கலையில் தொன்மங்கள் வாழ்வுபெற்றுள்ளன. வாழ்வு தந்த இலக்கியக் கலையைத் தொன்மங்கள் வளப்படுத்தி யுள்ளன. இலக்கியத்திற்குப் பாடுபொருளைப் பழங்கதைகள் வழங்கியுள்ளன. தொன்மங்களின் அடிப்படையில் அமையும் காப்பியங்கள் போன்றவை, தொன்மங்களை வேறு சொல்வடிவில் தருவனவாகும். காப்பியங்கள் மட்டுமல்லாமல் நாடகங்கள், கவிதைகள், புதினங்கள், கட்டுரைகள் சொற்பொழிவுகள் என்னும் எல்லா இலக்கியத் துறைகளிலும் தொன்மங்கள் இடம் பெற்றுள்ளன. புராணக் கதைகளில் உள்ள பெயர்களைக் குறியீடுகள் போலக் கொண்டு இக்காலக் கவிஞர்கள் தம் படைப்புக்களில் வழங்கி வருகின்றனர். இவ்வாறு இலக்கியத்தின் பாடுபொருளையும், பாடுமுறை உத்திகளையும் வழங்கும் நிலையில் தொன்மங்கள் விளங்குகின்றன.

தமிழில் புராண நூல்கள் பல இயற்றப்பட்டுள்ளன. இறைவனுடைய திருவிளையாடல்கள் பற்றிய கதைகளைப் புலவர்கள் தாங்கள் பாடிய பாடல்களுடன் சேர்த்துப் பாடினர். அவை இறைவனுடைய பெருமையைப் போற்றுவதற்காகவும் பழமையை உணர்த்துவதற்காகவும் கையாளப்பட்டன. பக்தி இலக்கியக் காலத்தில்தான் புராணச் செய்திகளைப் பயன்படுத்துவது அதிகமாயிற்று என்பதைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம். தேவாரம், திருவாசகம், கந்தபுராணம் முதலான சைவ பக்தி நூல்கள் சிவபெருமானின் திருவிளையாடல் பற்றிய பல்வேறு கதைக் குறிப்புக்களைத் தருகின்றன. அப்புராணச் செய்திகள் யாயும் தீயன அழிய இறைவனின் துணையை நாட வேண்டும் என்பதை எடுத்துரைப்பதோடு பக்தி வளரவும் துணைசெய்வனவாய் அமைகின்றன. பக்தி இலக்கியங்களில் இதிகாசம் மற்றும் புராணக் கதைக்கூறுகள் அமைந்து மக்களின் வாழ்வியல் நெறிகளைத் தூய்மைப்படுத்துகின்றன. வாழ்வாங்கு வாழும் வழிகளையும் சுட்டுகின்றன.

### அயனொடு மால்அறியாப் பேரொளிப் பிழம்பானவன்

அரியும் அயனும் தாமே பரம் என்று செருக்குக் கொண்டமையால் அவர்களுக்குள் பூசல் ஏற்பட தம்முடைய அடியையோ, முடியையோ கண்டு வருபவரே பரம் என்று சிவபெருமான் கூற, பேரொளிப் பிழம்பின் அடியையும், முடியையும் காணும் முயற்சியில் திருமால்



பன்றி உருவில் நிலத்தை அகழ்ந்து அடியைக் காணவும், பிரம்மன் தூய வெண்மையான அன்னத்தின் உருவில் விரைந்து பறந்து முடியைக் காணவும் சென்றனர். ஆனால் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் சென்றும் காணமுடியாமல் களைத்துத் தங்கள் ஆணவம் ஒடுக்கப் பெற்றனர். இந்நிலையில் முன்னர் தோன்றிய அனற்பிழம்பு, சிவலிங்க உருவில் காட்சியளித்து இருவருக்கும் அருள் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இப்புராணக் கதை குமரகுருபரரின் படைப்புக்களில் இடம் பெறுவதைக் காணலாம். அனைத்துலகங்களையும் படைத்தவனும் வேதங்களை அருளியவனுமான பிரம்மன் அழகிய இறகுகளையும் சிவந்த உச்சிக் கொண்டையையும் உடைய வெண்மையான அன்னப் பறவையாகவும், தாமரைக் கண்ணையுடைய திருமால் சிவந்த மயிரையும், கரிய கண்களையும், வெண்மையான பற்களையுமுடைய பன்றியாகவும் உருவெடுத்துத் தனித்தனியாகக் கீழேயும், மேலேயும் போய் சிவபெருமானின் அடிமுடிதேடி காணாமல் வருத்தமுற்றனர்.

''அஞ்சிறைச் சுவைதநிறச் செஞ்சூட்டன்னமும்
செம்மயிர்க் கருங்கண் வெள்ளெயிற் றேனமும்
ஆகுபு தனித்தனி யலமர நிவந்த
மூகெழு பரஞ்சுடர் வெளிப்பட்டு''

(பண்டார மும்மணிக் கோவை, பா - 2)

என்றும் பண்டார மும்மணிக் கோவை குறிப்பிடுகின்றது.

### ஆலின் கீழ் அறம் உரைக்கும் தன்மை

சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் சிவபெருமான் ஞானாசிரியனாகக் கல்லாலின் கீழ் வீற்றிருந்து சரியை, கிரியை, யோகம், என்னும் முதல் மூன்று பகுதிகளை விளக்கிக்கூறி, நான்காவதாகிய ஞானத்தை, இருந்தபடி இருந்து, மோன முத்திரையினால் அருளிச் செய்தார் என்பதும், இத்தத் திருக்கோலத்தில் தென்முகக் கடவுள் என்று போற்றப்பெறுகிறார் என்பதும் வழக்கிலுள்ள வரலாறு. இப்புராணங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கும் குமாரகுருபரர் காசிக் கலம்பகத்தில்,

''அடுத்த நான்மறை முனிவரர்
நால்வர்க்கு மும்மறைப் பொருள்கூற
எடுத்த கோலமா யானந்த
வனத்துமெம் மிதயத்து மிருந்தோனே''

(காசிக் கலம்பகம், பா - 8)

என்ற பாடலில் சனகர் முதலிய முனிவர் நால்வர்க்கும் வேதத்தின் பொருளைக் கூற எடுத்த கோலமாக ஆனந்த வனமான காசியில் இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். புராணச் செய்தியாக அமைந்துள்ள இது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளின் சார்பாக உலக இயற்கை உள்ளது என்பதையும், முனிவர் நால்வருக்கும் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து அந்நாற்பொருளைச் சொல்லி இருக்காவிடில் திருத்தமான முறையில் உலகியல் இயல்பு அவர்களுக்கு விளங்கியிருக்காது என்பதையும் பின் வந்தோரும் அதை அறிந்திருக்க முடியாது என்பதையும் விளக்குகின்றது.

### உமையம்மைக்கு இடப்பாகம் அளித்தல்

பிருங்கி முனிவர் சிவபெருமானை வலம் வந்தபோது அருகிருந்த இறைவியை வலம் வராமல் போகவே, இறைவி தன்னையும் முனிவர் சுற்றிவரவேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டுகோள் விடுக்க, அவரும் இறைவிக்குத் தனது இடப்பாகம் கொடுத்ததாகப் புராணம் கூறுகின்றது. இந்தச் செய்தியினை,

''ஆகங் கலந்தொருவர் பாகம் பகுத்தபெண்
அம்மானை யாடியருளே
கன்னிகைக்கு
மெய்யி லொருகூ றளித்தனரால்
விமலர் கமலைத் தியாகர்
வையமுழு தொருங்கீன்ற விடப்பாகர்''

*(மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், பா - 8)*

என்னும் பாடற்பகுதிகளின் மூலம் குறிப்பிடுகின்றார்.

### சந்திரனுக்கு தக்கன் இட்டசாபம்

பிரமனுடைய மானசபுத்திரர்களில் ஒருவன் தக்கன். இவன் அக்கினியிடம் அறுபது பெண்களைப் பெற்றான். அவர்களுள் இருபத்தெழுவரை சந்திரனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான் ஆனால் சந்திரன் உரோகிணியிடம் மிக்க விருப்பம் உடையவனாகவும், மற்ற மனைவியரிடத்தில் அன்பில்லாது புறக்கணிப்பவனாகவும் இருந்தமையால் சினம் கொண்ட தக்கன், சந்திரனின் கலைகள் தேயுமாறு சாபம் கொடுத்தான். அச்சந்திரன் சிவபெருமானை வேண்டிச் சாபம் போக்கிக் கொண்டான் என்பது புராணக் கதையாகும் இப்புராணக் கதையை உள்ளடக்கி பெருமையுடைய வியாழகுருவுக்கு



நீ செய்த பெருங்குற்றம், பின்னும் மாமனாரான தக்கன் இட்ட சாபச் சொல்லும் வளர்கின்ற இளம்பருவத்தில் ஏற்பட்ட நரையும், திரையும் முதிர்ந்து வளையும் தன்மையும் நீங்கப்பெறுவாய் என்னும் பொருளில் பாடலை அமைக்கின்றார் இதை

''மன்பெருங் குரவற்பிழைத்தபாவமுமமற்றை
மாமடிக ளிடுசாவமும்
வளரிளம் பருவத்து நரைதிரையு முதிர்கூனும்
மாற்றிடப் பெறுதி கண்டாய்''

*(மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், பா - 7)*

என்ற மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்ப் பாடலின் மூலம் குறிப்பிடுகின்றார். தாம் கேட்டறிந்த புராணக் கதைகளையும், கண்டறிந்த செய்திகளையும் கற்பனை கலந்து இலக்கியம் படைப்பதில் வல்லவர்களான புலவர்களில் ஒருவராக குமரகுருபரரும் விளங்கினார் என்பதில் ஐயமில்லை.

### பிட்டுக்கு மண்சுமந்த இறைவன்

சிவபெருமான் கூலியாளாய் வந்து வந்தி என்னும் மூதாட்டியிடம் அவள் பங்குக்குரிய வேலையைச் செய்வதற்காக வையை ஆற்றங்கரைக்கு வந்தவர் அதைச் செய்யாது விளையாடிக் கொண்டிருக்க, அதைக்கண்ட பாண்டிய மன்னன் தன் பிரம்பால் அடித்தாகப் புராணம் கூறுகின்றது. குமரகுருபரரும் தமது நூலில் பல இடங்களில் இச்செய்தியைச் சுட்டிக்காட்டு முகத்தான் தன் திருவடிகளைத் துதித்த வந்தி என்ற மலடி முன் உதவிய பிட்டு உணவினால் மண்வெட்டியை இறைவன் தோள்கள் சுமந்தன என்பதை

''இணையடி பரவிய மலடிமு னுதவிய
இடியலினுணவொரு கொட்டைப் பரிந்தன''

*(காசிக் கலம்பகம், பா - 5)*

என்ற பாடலின் மூலமும் முன்பு அரிமர்த்தன பாண்டியன் அடித்த பிரம்படிக்கு அஞ்சி அம்மையுள்ள இடப்பாகத்தைக் காட்டாமல் வலப்பாகத்தைக் காட்டியதை

''கோச்செழியன் மாற்றடிக் கஞ்சு மிடப்பாகனை''

*(காசிக் கலம்பகம், பா - 60)*

என்ற பாடலடியின் மூலமும் குறிப்பிடுகின்றனர்.

முடிவுரை:

சிவபெருமானின் புராணச் செய்திகளின் மூலம் தொன்மம் என்பது பழங்கால மக்களால் உண்மை என்று நம்பப் பட்டதாகவும், சமயச் சடங்குகளுடன் தொடர்புடையதாகவும், தனியொருவரால் ஆக்கப்படுவதில்லை என்றும், மக்களினத்தின் கூட்டு முயற்சியால் தோன்றி வளர்ந்து வந்துள்ளது என்பதையும் அறிய முடிகின்றது. இயற்கை இறந்த ஆற்றல்களையும், தெய்வங்களையும் பற்றியதாகத் திகழ்கின்றது. இயற்கை நிகழ்ச்சிகளின், நுண் கருத்துக்களின் பருப்பொருள் விளக்கமாக அமைகின்றது. இத்தொன்மச் செய்திகளின் மூலம் சிவபெருமானே முழுக் கடவுளாகப் போற்றப்படும் தன்மையையும் அறிய முடிகின்றது.